# இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திப் பேரவையின் - 2011

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திப் பேரவையின் 2011 திசெம்ப ர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

அரசாங்க மூலதன மானியமாக பேரவைக்கு மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 8,567,852 தொகை இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 24 இன் பிரகாரம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வரைவு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் பேரேட்டுடன் இணங்காமை ரூபா 68,915 தொகை எம்மால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளின் பிரகாரம் அவசியமான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் மேலும் அத்தகைய கணக்கீட்டுக் குறைபாடுகள் இருக்கக் கூடும் என்பது கணக்காய்வில் மறுக்கப்பட முடியாததாகும்.

#### 1.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2011 ஆம் ஆண்டின் போது பேரவையின் மனித வள அபிவிருத்திச் செயற்பாடுகளாக வருமானச் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிக்கும் வருடாந்த முன்னேற்ற அறிக்கையில் அவ்வாண்டின் போது

மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளாகக் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிக்குமிடையே ரூபா 282,452 தொகையான இணக்கமற்ற வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) அதிகாரச்சட்டம்** | |
| (i) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு | நிதி ஆண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வருடாந்த வரைவு அறிக்கையினை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு மதிப்பீடு பணிப்பாளர் சபையினால் 2012 மார்ச் 29 ஆம் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (ii) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டம் | ஏற்பாடு செய்யப்பட்ட பணிக்கொடைக் கொடுப்பனவு எதிர்காலப் பொறுப்புக்களை எதிர்கொள்ளக் கூடியவகையில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப் பிரமாணம் | |
| நி.பி. 371.2(ஆ) உப பந்தி | குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதியாக ரூபா 20,000 இற்கு மேலான தொகை பெற்றுக்கொள்ளப்படலாகாத போதிலும் 23 சந்தர்ப்பங்களின் போது ரூபா 20,000 இற்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 1,340,000 ஆகும். |

| | |
|---|---|
| (இ) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டி கைநூல் | |
| ------------------------------------------------------------- | |
| 1.2.1 ஆம் உப பந்தி | அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவு நடைமுறையைப் பின்பற்றாது 18 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,483,317 தொகையான மரத்தளபாடங்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| **(ஈ) சுற்றறிக்கை** | |
| ------------------- | |
| 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 5.2.6 ஆம் உப பந்தி | மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட வருமானச் செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறான பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகை என்பன தயாரிக்கப்பட்டு பாதீட்டுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 6.5.1 ஆம் உப பந்தி | நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்கு முன்னர் வருடாந்த வரைபு அறிக்கை மற்றும் கணக்குகள் வரிசை அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கான பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 7.4.2 ஆம் உப பந்தி | சிரேஷ்ட முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 02. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் போது பேரவையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ரூபா 758,795 பற்றாக்குறையானதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,563,052 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் ரூபா 2,321,847 ஆன வீழ்ச்சிக்கு அரசாங்க மீண்டெழும் மானியம் ரூபா 334,893 ஆல் குறைவடைந்திருந்தமையும் மீண்டெழும் செலவினம் ரூபா 2,021,393 ஆல் அதிகரித்திருந்தமை போன்ற விடயங்கள் முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திறன்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பேரவை ஸ்தாபிக்கப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 14(I) ஆம் பந்தியின் பிரகாரம் தேசிய மனிதவள கொள்கையின் சகல பிரிவுகளில் இருந்தும் அமைச்சருக்கு அறிவுறுத்தல்கள் வழங்குதல், தேசிய கொள்கைக்கு இணங்கும் வகையிலான மனித வள அபிவிருத்தித் திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அரசாங்கத்திடம் முன்வைத்தல் மற்றும் தேசிய மனிதவள கொள்கைகள் மற்றும் அமுலில் உள்ள திட்டங்களுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் தொடர்பாக அமைச்சருக்கு சிபாரிசு செய்வதனைப் போல் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வள அபிவிருத்தித் திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவது தொடர்பாக ஆராய்ந்தறிவது போன்ற சபையின் பிரதான செயற்பாடுகள் மற்றும் பணிகள் எதுவும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பேரவையின் அடிப்படை நோக்கமான மனிதவள அபிவிருத்திக்காகச் செலவிடப்பட்ட தொகை, மொத்த மீண்டெழும் செலவினத்தின் சத வீதமாக கீழே தரப்படுகின்றது.

| ஆண்டு | மொத்த மீண்டெழும் செலவினம் | மனிதவள அபிவிருத்தி செலவினம் | மொத்த மீண்டெழும் செலவினத்தின் சதவீதமாக மனிதவள அபிவிருத்திச் செலவினம் |
|---|---|---|---|
| | | | % |
| 2005 | 5,152,941 | 844,454 | 16.4 |
| 2006 | 5,868,600 | 692,147 | 11.8 |
| 2007 | 6,086,767 | 535,632 | 8.8 |
| 2008 | 6,728,939 | 659,801 | 9.8 |
| 2009 | 8,675,394 | 1,540,029 | 17,.7 |
| 2010 | 12,423,287 | 3,378,959 | 27,.2 |
| 2011 | 30,247,869 | 19,182,148 | 63.42 |

2011 ஆம் ஆண்டின் போது மனிதவள அபிவிருத்திச் செலவினத்தில் இலத்திரனியல் மற்றும் பத்திரிகை விளம்பரத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 9,939,546 தொகையான செலவினம் கழிக்கப்பட்டதை அடுத்து மொத்த மீண்டெழும் செலவினத்தின் சதவீதமாக மனித வள அபிவிருத்திச் செலவின சதவீதம் 63.42% அல்லாது 48% ஆன குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது.

(இ) டபிள்யூ - 9 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலக்கிடப்பட்ட குழுவின் மனோநிலையை அபிவிருத்தி செய்வதற்காக ஆளுமை அபிவிருத்திச் செயற்பாட்டின் மூலம் அவர்களை உற்சாகமூட்டி மாற்று தொழில்மார்க்கங்களில் ஈடுபடுவதன் மூலம் வாழ்க்கையில் வெற்றியடையக்கூடும் என சுட்டிக்காட்டி இதற்காக அவர்களுக்கு உரிய பயிற்சி நிறுவகங்களுக்கு தொடர்புபடுத்தப்படுவதை அடிப்படை நோக்காகக் கொண்டு க.பொ.த.(சா.த) சகல பாடங்களிலும் சித்தியெய்தியிராத மாணவர்களை ஊக்குவிக்கும் விசேட செயற்திட்டங்களை செயற்படுத்தியிருந்தது. இது தொடர்பாக ஆய்வு செய்யப்படுகையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மேற்குறித்த செயற்திட்டங்களுக்காக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் ரூபா 12,979,803 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 6,427,856 தொகை அதாவது மொத்த செலவினத்தில்

50% பிரசார நடவடிக்கைகளுக்காக மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ii) பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் 09 பாடங்கள் சித்தியெய்தியிராத மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 8873 ஆன போதிலும், செயற்திட்டத்திற்காக விண்ணப்பித்திருந்த மொத்த மாணவர் எண்ணிக்கை 1201 ஆகக் காணப்பட்டது. அதாவது இலக்கிடப்பட்ட குழுவில் 13% அளவிலான குறைவான அளவாகும்.

(iii) செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது அனைத்து மாவட்டத்திற்கும் ஒரு நாள் கருத்தரங்கும் 05 நாள் முகாம் படி நடாத்துவதை நோக்காகக் கொண்டிருந்த போதிலும் மாவட்ட மட்டத்தில் 14 கருத்தரங்குகளும் 04 வதிவிடச் செயலமர்வுகளும் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அந்த 04 வதிவிட செயலமர்வுகளுக்காக மாணவர்களின் பங்குபற்றல் விண்ணப்பித்த 1201 மாணவர்களில் 510 மாணவர்கள் மாத்திரமேயாகும். எனினும், மாவட்ட கருத்தரங்குகள் மற்றும் வதிவிட செயலமர்வுகளுக்காக ஏற்கப்பட்ட செலவினம் முறையே ரூபா 439,703 ஆகவும் ரூபா 6,233,420 ஆகக் காணப்பட்டன.

(iv) இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பல்வேறு கல்வியியலாளர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பல்வேறு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்ட போதிலும் செயற்திட்டங்கள் செயற்பட வேண்டிய முறை தொடர்பான பரிந்துரைகள் எதுவும் அவர்களுக்கு கிடைத்திருக்கவில்லை.

(v) ஆந்த விடுதி முகாம்களின் இறுதியில் அதில் கலந்துகொண்ட மாணவர்களை பயிற்சி நிறுவகங்களுக்கு அனுப்பிவைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக பயிற்சி நிறுவகங்களாக தேசிய தொழில்சார் பயிற்சி மற்றும் தொழிநுட்ப பயிற்சி அதிகாரசபை (NAITA) மாத்திரம் முன்வந்திருந்தது. எவ்வாறெனினும், மாணவர்களின் கல்வி தகமைகள் மற்றும்

அவர்கள் எதிர்பார்க்கும் தொழில்சார் பயிற்சிகளுக்குப் பொருந்தும் வகையில் பயிற்சிச் சந்தர்ப்பங்கள் அந் நிறுவகத்திடம் இன்மையால் இந் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(vi) இலக்கிடப்பட்ட கட்டளைகள் மற்றும் அவர்களது எதிர்பார்ப்புகள் தொடர்பாக முன் அறிவு இன்றி எவ்வகையிலும் கவர்ச்சிகரமான பிரசார விளம்பரம் குறித்து மாத்திரம் நம்பிக்கை கொண்டு செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக இது வரை இச் செயற்திட்டத்திற்கு அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும் முடியாது தோல்வியுற்றிருந்தது.

(ஈ) ''வேலையற்றமையில் இருந்து வேலை வாய்ப்பிற்கு'' செயற்திட்டம்

அநுராதபுர மாவட்டத்தில் தொழில்வாய்ப்பை எதிர்பார்த்துள்ள நபர்களுக்கு பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் பதிவுசெய்யப்பட்டு அத் தகவல்களை சபையின் வலையமைப்பில் வெளிப்படுத்தல், தொழிலை வழங்கக்கூடிய தனியார் நிறுவகங்களைப் பதிவுசெய்து கொண்டு அவர்கள் அனைவரையும் 2012 மார்ச் 31 இற்கு முன்னர் தனியார் பிரிவுகளின் தொழிலுக்காக அனுப்பிவைப்பதனை நோக்காகக் கொண்டு ''வேலையற்றமையில் இருந்து வேலை வாய்ப்பிற்கு'' எனும் விசேட செயற்திட்டம் ஒன்று 2012 தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

மேற்குறித்த நோக்கை நிறைவேற்று உள அபிவிருத்தி மற்றும் மனித வள முகாமைத்துவ ஆலோசகருடன் 2011 யூலை 05 ஆம் திகதி உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இச் செயற்திட்டத்திற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பெறுமதி ரூபா 1,248,000 ஆன போதிலும் கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 03 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் இச் செயற்பாடு போட்டி விலை மனுக்கோரலிற்காக தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. இவ்வாறே, இந்த அத்தியாயத்தின்

3.12 ஆம் உப பந்தியின் பிரகாரம் உரிய வழங்குனரின் ஆரம்பத் தகமை தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிராததுடன் 8.12.4 ஆம் உப பந்தியின் பிரகாரம் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட கொள்வனவுகளிற்கு இணங்கும் வகையில் சேவையை மேற்கொண்டிருந்தமைக்கான சான்றிதழ் நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 மார்ச் 31 ஆம் திகதிய உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் 2012 ஏப்ரல் 27 கணக்காய்வு திகதி திகதி வரை தரவு வங்கிக்கு உள்ளடக்கப்பட்டிருந்த பதிவுசெய்திருந்த வேலைவாய்ப்பை எதிர்பார்த்துள்ளவர்களின் எண்ணிக்கை 790 ஆகக் காணப்பட்டது. எனினும், இதில் எந்தளவு எண்ணிக்கையானோர் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்பது குறித்தும் பதிவு செய்யப்பட்ட தனியார் நிறுவகங்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களும் கணக்காய்விற்கு வழங்கப்படுவதற்கு சபை தவறியிருந்ததுடன் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடமும் அத் தகவல்கள் எதுவும் இருக்கவில்லை.

(iii) தரவு வங்கியின் பிரகாரம், அநுராதபுரம் மாவட்டத்தில் வேலை வாய்ப்பை எதிர்பார்த்துள்ளவர்களின் எண்ணிக்கை 790 என்பது தர்க்க ரீதியானதென்பதனால் அச் சேவை ஒப்பந்தத்தைப் பொறுப்பேற்ற வழங்குனர் சுயமாக சேவையை முறைப்படி வழங்கியுள்ளாரா என்பது குறித்து கணக்காய்வின் போது சிக்கல் எழுந்திருந்தது. இவ்வாறே, பதிவு செய்யப்பட்ட வேலை வாய்ப்பை எதிர்பார்த்துள்ளவர்களை வேலையில் ஈடுபடுத்துவதற்கு அவசியமான தனியார் நிறுவகம் பதிவுசெய்யப்பட்டிராமையும் வேலையில் ஈடுபடுத்தப்பட்ட நபர்களும் இன்மையால் இச் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,218,153 தொகை விளைவற்ற செலவினமாகியது.

(உ) மனிதவள வருடம்

----------------------------

2011 செப்தெம்பர் 22 ஆம் திகதி முதல் 2012 செப்தெம்பர் 22 வரை மனித வள அபிவிருத்தி வருடமாக சபையினால் இனங்காணப்பட்டிருந்ததுடன் இதற்காக ‘‘நிபுணதா சந்த’’ எனும்

பெயரிலான தொழிற்பயிற்சி தொலைக்காட்சி இசை நிகழ்ச்சி ஒன்றை ஒளிபரப்புவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக பத்திரிகை விளம்பரத்திற்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 3,082,453 செலவிடப்பட்டிருந்தது. பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதைத் தவிர 2012 ஏப்ரல் 27 ஆம் திகதி வரையிலும் இச் செயற்திட்டத்தின் முன்னேற்றம் இருக்கவில்லை.

(ஊ) பொது மக்களை விளிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

2011 வருடாந்த செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் போது 12 நிகழ்ச்சிகள் நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஒரு நிகழ்ச்சித்திட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. இதில் 129 நபர்கள் மாத்திரமே கலந்துகொண்டிருந்ததுடன் செயலமர்வுகளிற்குரிய பத்திரிகை விளம்பரத்திற்காக ரூபா 78,624 தொகையும் செயலமர்வுகளிற்காக ரூபா 12,900 தொகையுமாக ரூபா 91,524 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(எ) செயற்திட்டம் பூர்த்திசெய்யப்படாது கைவிடப்பட்டிருந்தமை

சபையினால் 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த பின்வரும் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படாது 2011 ஆம் ஆண்டில் உள்ளவாறு கைவிடப்பட்டிருந்தன.

(i) பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவருடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பாடநெறியைக் கைவிட்டுச் செல்லும் மாணவர்கள் தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொண்டு உரிய அறிக்கை 2010 ஏப்ரல் 10 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ சபையிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் இது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. செலவிடப்பட்ட தொகை ரூபா 76,875 ஆகும்.

(ii) கேளரவ அமைச்சரின் கட்டளையில் ஆரம்பிக்கப்பட்ட எப் - 3 நிகழ்ச்சித்திட்டம், க.பொ.த உயர் தரம் மற்றும் சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெறாது நிர்க்கதியான மாணவர்களுக்கு விசேட தொழிற்திறன் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் உடனடிப் பயிற்சி ஒன்றை வழங்கி தொழிலில் ஈடுபடுத்துவதே அடிப்படை

நோக்கமாயினும், எந்த ஒரு மாணவனுக்கும் தொழில் ஒன்றை வழங்கியிராததுடன் சில நாட்களுக்கு பயிற்சிக்காக வருகைதந்த 9737 மாணவர்களில் தற்போதைய முன்னேற்றம் என்ன என்பது குறித்து பின்தொடர் நடவடிக்கையேனும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. 2010 திசெம்பர் முதல் 2011 ஏப்ரல் வரை ரூபா 5,601,870 தொகையான செலவினம் இதற்காகச் செலவிடப்பட்டிருந்ததுடன் இதில் 90% ஆன அதாவது ரூபா 5,066,419 தொகை இலத்திரனியல் மற்றும் பத்திரிகை விளம்பரங்களுக்காகச் செலவிடப்பட்டிருந்தது.

## 04 கணக்களி பொறுப்பும் நல்ஆளுகையும்

### 4.1 கூட்டுத்திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் உப பந்தியின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவு தொடர்பான மீளாய்வொன்று 2010 – 2014 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டு கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, எதிர்கொள்ளப்பட வேண்டிய இலக்குகளின் நிதிசார் பெறுமதி காண்பிக்கப்பட்டிராமையால் ஆண்டிற்கான முன்னேற்றம் நிதிரீதியாக மதிப்பிடப்படுவதற்கு முடியாதிருந்தது. மேலும் 2011 – 2015 காலப்பகுதிக்குரிய மீளாய்வு செய்யப்பட்ட கூட்டுத்திட்டம் 2012 மே 08 கணக்காய்வுத் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டுத்திட்டம்

2011 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத்திட்டம் பணிப்பாளர் சபையினால் திருத்தங்களுடன் 2012 மார்ச் 29 ஆம் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அதாவது மீளாய்வாண்டு பூர்த்தியடைவதற்கு 03 மாதங்கள் கடந்த பின்னரேயாகும். நிறுவகத்தில் நிலவும் நோக்கங்களுக்கு உடன்படும் வகையில் எதிர்வரும் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் செயற்பாடுகளை மேற்கொண்டு போதிய முகாமைத்துவத்துடன் இதற்காக செலவினத்தை மேற்கொள்வது வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தின்

நோக்கானமையால் வருடம் கடந்ததன் பின்னர் தயாரிக்கப்படும் திட்டத்தின் ஆக்கபூர்வத் தன்மை கணக்காய்வின் போது சிக்கலானதாகக் காணப்பட்டது. 2011 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் அதன் முன்னேற்றம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

(அ) 2011 வருடாந்த செயற்பாட்டுத்திட்டத்தில் காண்பிக்கப்பட்டவாறு ரூபா 8,570,000 தொகையான 08 நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 வருடாந்த செயற்பாட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்படாத மனித வள வருடம் எனும் பெயரிலான நிகழ்ச்சித்திட்டத்தின் ஆண்டின் போது ரூபா 3,086,400 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) ஒரு பிரதான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடாத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 50 துணை நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒரு நிகழ்ச்சித்திட்டங்களிற்கு ரூபா 12,500 படி ரூபா 625,000 தொகையான ஏற்பாடு செயற்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அத்தகைய 38 துணை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக மாத்திரம் ரூபா 14,853,000 செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 390,868 ஆகக் காணப்பட்டதுடன் இது திட்டமிடப்பட்ட செலவினத்தில் 3127% அளவிலான சதவீதமாகும்.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

ஒரு வருடத்திற்கு ரூபா 30 மில்லியன் தொகைக்கும் மேலான மீண்டெழும் செலவினத்தை மேற்கொள்ளும் இப் பேரவையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தோற்றுவிக்கப்பட்டிராததுடன் இளைஞர் விவகார தொழிற்திறன் அபிவிருத்தி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் பேரவையின் நடவடிக்கைகள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட செலவுகளுக்கும் உள்ளபடியான செலவுகளுக்கும் இடையே முரண்களைக் கருத்திற்கொள்கையில் 08 செலவின

விடயங்கள் ரூபா 3,489,511 ஆன கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) வழங்கல்கள் மற்றும் சேவைகள்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) உள்ளகக் கணக்காய்வு
(உ) செயற்திட்ட அமுலாக்கம்